முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

மலர் 1 | செப்டம்பர் 1951 | இதழ் 2

28 DEC
MADRA
2247/10

தென்னிந்திய முதியோர் கல்வி

முதல் அரங்கின் சிபார்சுகள்

தென்னிந்திய முதியோர் கல்வி முதல் அரங்கு இந்திய அரசாங்கத்தின் போஷாதரவில் தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் முயற்சியில் சென்னை அடையாற்றிலுள்ள "தாமோதர் பூங்கா"வில் ஏப்ரல் மாதம் 23ந் தேதி முதல் 30-ந் தேதிவரை நடைபெற்றது.

பல ஜில்லாக்களிலிருந்து முதியோர் கல்விச் சங்கத்தின் பிரதிநிதிகளாக 50 பேர்களுக்கு மேலும், முதியோர் கல்வியில் ஊக்கம் கொண்ட பெரியோர்கள் பலர் பார்வையாளராகவும் சென்னை, ஹைதராபாத், திருவாங்கூர், கொச்சி அரசாங்கங்களிலிருந்து பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தனர்.

இந்த அரங்கை இந்திய அரசாங்கத்துக் கல்வி மந்திரியின் உதவிக் காரியதரிசியாகிய பேராசிரியர் ஹுமாயுன் கபீர் அவர்கள் தொடங்கிவைத்தார். சென்னை அரசாங்க உணவு மந்திரியும், அரங்கின் தலைவருமான திரு. ஜே. எல். பி. ரோச்-விக்டோரியா அவர்கள் எல்லாப் பிரதிநிதிகளையும், மற்ற பெரியோர்களையும் வரவேற்றார்.

இவ்வரங்கு மொழிக்கு ஏற்றவாறு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் கமிட்டிகளும், எட்டுவிதமான விஷய கமிட்டிகளும் இருந்தன. இக்கமிட்டிகள் கொண்டுவந்த சிபார்சுகளையும் மொழித் தொகுதியினர் வெளியிட்ட அறிக்கைகளையும் இவ்வரங்கு அங்கீகரித்தது. அதற்கு திரு. ஜி. ஹரிசர்வோத்தமராவ் தலைமை வகித்து, திரு. ஏ. ஜி. வில்வராய் அவர்களுடைய உதவியால் கமிட்டியினருடைய எல்லாக் காரியங்களையும் ஒழுங்குபடுத்தினர்.

கலாக்ஷேத்திர டைரக்டர் திருமதி ருக்மணி தேவி அவர்கள் முதியோர் கல்வியின் முன்னேற்றத்தை மிகவும் புகழ்ந்து பேசினர். பின்னர் ஐக்கியநாட்டு சமுதாய கல்வி அறிவு வளர்ச்சி ஸ்தாபகத்தினரைச் சேர்ந்த இந்திய அரசாங்கத்தில் முதியோர்கல்வி முயற்சிக்கு உதவவந்த திருமதி எல்லா கிரிப்பன் இந்திய அரசாங்கத்தின் சார்பில் பிரதிநிதியாக வந்திருந்தினர். அவர்கள் மற்ற நாடுகளின் முதியோர் கல்வி முறைகளையும், புதிதாகப் படித்தவர்களுக்கு ஏற்ற புத்தகங்களை எவ்வாறு தொகுப்பது என்பது பற்றியும் விளக்கி உரை ஆற்றினர்கள். அவர்களுடைய அனுபவங்களைக் கேட்ட கமிட்டியினர் அதன்படி செய்யவும் தீர்மானித்தனர். சென்னையிலிருந்து ஆங்கில குழுவைச் சேர்ந்த திரு. பாக், முன்கால கல்வி மந்திரி திரு. டி. எஸ். அவினாசிலிங்கம், சென்னையிலுள்ள அமெரிக்க விளம்பர அதிகாரி திரு. ஸ்டான்லி. ஆர். சாட்ராண்ட் முதலியோர் பேசினர்.

திரு. கே. எம். உன்னிதன், சென்னை அரசாங்க கல்வி இலாகா காரியதரிசி அவர்கள் அரங்கின் இறுதி சொற்பொழிவாற்றினர். அப்போது பிரதிநிதிகள் பலரும் அரங்கின் நடைபெற்ற விஷயங்களைப்பற்றி பேசினர்கள். உதவி தலைவர் திரு. ஹரிசர்வோத்தமராவ் அரங்கின் நடவடிக்கைகளைப் பற்றி ஓர் அறிக்கை வாசித்தார். திரு. ஏ ஜி. வில்வராய் அவர்கள் அரங்கின் வருங்கால வேலைத் திட்டமொன்றை விளக்கினர்கள். முடிவில் திரு டி. ஜே. ஆர். கோபால், பொதுக்காரியதரிசி அவர்கள் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறி, அவ்வரங்கு வெற்றி பெறச் செய்ததற்காக நன்றி செலுத்தினர்.

ஸ்தாபனத்தைப்பற்றி அரங்கின் சிபார்சுகள்

செய்திறனும் முறைகளும்

அரங்கின் நான்கு மொழிவாரியாகப்பிரித்த கமிட்டிகள் எட்டு விதமான பொருள்களைப் பற்றி கமிட்டிகள் என்று பிரிக்கப்பட்டனர்.

(1) ஸ்தாபனம் (2) நிர்வாகம் (3) உபகரணங்கள் (4) உதவி செய்யும் தொகுதியினர் (5) பயிற்சியும் மனோதத்துவமும் (6) சமநிலைப் படுத்தல் (7) மாதரின் விசேஷப் பிரச்னைகள் (8) தொடர்ச்சி இலக்கியங்கள்.

மொழிவாரித் தொகுதியினரின் சிபார்சுகள்

தமிழ் மொழித் தொகுதியினர்:—முதியோர்க்குத் தமிழ் கற்பிக்கும் முறையைப் பற்றித் தர்க்கித்தனர். முடிவில் இப்பெரிய நாடாகிய இந்தியாவுக்கு எந்தவிதமான முறைகளும் கையாள முடியுமென்றும் திரு. டி. ஜே. ஆர். கோபால், வேண்டுகோளுக்கிணங்கி லாபக் முறையே சிறந்த தென்றும் தற்சமயம், தொண்டர்களின் அபிப்பிராயப்படி அதையே கையாளலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தெலுங்கு மொழித் தொகுதியினர்:— ஆரம்பம் பாடத்திற்கேற்ற அதிகமாக உபயோகத்திலுள்ள வார்த்தைகளை மட்டும் தெரிந்தெடுத்து படிப்போர் ஏதும் தடையின்றி வாசித்து எளிதில் அறியத்தக்கதாய் படங்கள் மூலமாய்க் கற்பிக்க முயல வேண்டும் என்று தீர்மானித்தனர்.

மலையாளமொழித் தொகுதியினர்:—முதியோர் கல்வியின் வெற்றிக்குக் காரணமாயிருப்பது ஆசிரியருடைய திறமையும், கற்கும் முதியோரின் ஊக்கத்தையும் பொருத்திருக்கிறது என்றனர். மேலும் தனிப்பட்ட முறையில் பல சிறந்த புத்தகங்கள் இது சம்பந்தமாக வெளியிடப்படவேண்டும் என்றும், அரசாங்கம் சிறந்த புத்தகங்களுக்குப் பரிசு அளிக்க வேண்டும் என்றும் பின்னர் அரசாங்கமே அவற்றைப் பிரசுரிக்கலாம் என்றும் தீர்மானித்தனர்.

கன்னட மொழித் தொகுதியினர்:—கன்னட மொழி பேசும் மற்ற பாகங்களாகிய பம்பாய், மைசூர் பிரதிநிதிகள் இல்லாதபோது எவ்விதமான சிபார்சுகளும் பயனில்லை என்றும், இரண்டு ஆண்டுகளாக முதியோர் கல்வி ஆரம்பித்தும் இன்னும் எந்தவிதமான புத்தகங்களும், பாட படங்களும் வெளியிடாதது மிக்க வருந்தத்தக்கது என்றும் கூறினர். மேலும் மைசூரில் உபயோகிக்கும் புத்தகங்களையே கன்னட மொழி பேசும் இடங்களிலும் உபயோகிக்க வேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

பேராசிரியர் ஹுமாயூன் கபீர் அரங்கை திறந்து வைத்து உரை ஆற்றுகிறார்.

ஸ்தாபனக் கமிட்டியின் சிபார்சுகள்—பின்வருமாறு: முதலாவது ஒரு கிராமத்தின் அவசியம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர் பவனி, பொதுக்கூட்டம் வைத்தல், வீடு வீடாகச் சென்று பெரியோர்களைச் சந்தித்தல், மாணவர்களைக் கூட்டிக் கொண்டு, சுகாதாரம், சமூக சீர்திருத்தம், கல்வி சம்பந்தமான சேவைகள் செய்தல், பத்திரிகைகள், காட்சிசாலை முதலியவற்றை வைத்து நடத்துதல். ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தி நன்றாக வேலை செய்ய வைத்தல். கல்வி கற்கும் முதியோரைக் கவர்ச்சி செய்யத்தக்கதாக எல்லாவிதங்களிலும் அமைந்திருக்க வேண்டும். இவற்றிற்கு ஏற்ப வகுப்பு நடைபெறத்தக்கதாய் அமைத்துக் கொள்ளவேண்டும்.

நிர்வாகக் கமிட்டியினரின் ஆலோசனைகள்—பின்கண்டவாறு: மாணவர்கள் பவனி வருதல், பிரசாரம் செய்தல், பத்திரிகைகள் வெளியிடுதல், முதியோர் கல்விப் பொருட்காட்சி சாலை அமைத்தல், கல்வி யறிவு சம்பந்தமாக

விளையாட்டு செய்கைகள், சமூக நாடகம் முதலியவை இயற்றல்.

கல்லூரியோ, ஹைஸ்கூலோ இவற்றின் ஒவ்வொன்றிலும், மாணவ சமூக ஊழிய சங்கங்கள் நடைபெறச் செய்யவேண்டும் என்று அரசாங்கம் கோரவேண்டும்.

முதியோர் கல்வி வகுப்பு நடத்த விரும்பும் யாவருக்கும் சிறிய பயிற்சி முகாம் ஏற்படுத்த வேண்டும். மேலும் அரசாங்கப் பாட திட்டத்தில் முதியோர் கல்விப் பயிற்சிக்குரியவை சேர்க்கப்படவேண்டும் என்று வேண்டுதல்.

மாணவர்கள் முதியோர் கல்விச்சேவையை ஏற்கவேண்டும் என்றும், அத்தகையோருக்கே அரசாங்கத்தில் வேலை அளிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தை வேண்டுதல். கல்லூரி, ஹைஸ்கூல் அதிகாரிகள் அவர்களுக்குத் தகுந்த வெகுமதிகள் அளிக்கச் செய்தல், முதியோர் கல்வி ஸ்தாபனங்களில் ஊழியம் செய்ய இயலாதவர்கள் தங்கள் தங்கள் இடங்களிலேயே ஊழியம் செய்யத் தக்கதாய் எல்லா விதமான உத்திகளைப் புரிந்துவரலாம். முதியோர் கல்வியின் முன்னேற்றத்திற்காக மாணவர்களைத் தங்கள் விடுமுறை நாட்களில் வெளியிடங்களுக்கு அழைத்துச்சென்று முறையான திட்டங்களைப் போதித்து வரலாம்.

ஒவ்வொரு சர்வகலாசாலையும் ஒரு புதிய சமூக முதியோர் கல்வி ஸ்தாபனத்தை ஏற்படுத்தி இதைக் குறித்து ஆராய்ச்சி செய்வதுமல்லாமல் சிறந்த முறையில் போதிக்கும் ஆசிரியர்களையும் உதவவேண்டும் என்று வேண்டுதல். மேலும் சர்வ கலாசாலைகள் பல உபந்நியாசங்கள் நடைப்பெறச் செய்யலாம். அதனால் நல்ல திறனடைந்து கல்வி, சன்மார்க்கம் இவற்றில் மேம்பாடு அடையலாம்.

உபகரணக் கமிட்டியினரின் சிபார்சுகள்

சென்னையிலுள்ள எல்லா மொழியிலுள்ள பத்திரிகைகளெல்லாம் முதியோர் கல்வி சம்பந்தமான அறிக்கைகளைப் பல ஜில்லாக்களிலிருந்து திரட்டி ஒவ்வொரு வாரக் கடைசியிலும் வெளியிடச் செய்வதும், முதியோர் கல்விக்கென வாசிக்கத் தகுந்த பாடங்களை வெளியிடச் செய்வதும் அவசியம். கல்வி கற்கும் முதியோர் மிக்க ஊக்கத்தோடு வாசிக்கத் தக்கதாய் பாடம் பெரிய எழுத்து இவற்றால் பிரசுரித்திடச் செய்தல்.

பொது மக்கள் நூல் நிலயம் சென்னை மாகாணத்தில் பற்பல இடங்களில் வைக்கப்பட்டு அதன் மூலம் முதியோர் கல்வியைப் பரவச் செய்தல். ஒவ்வொரு ஜில்லாவிலும் நூல் நிலைய அதிகாரிகள், போதிய அளவில் நூல்களை, முதியோர் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கும் கல்வி கற்கும் முதியோர்க்கும் அளிக்கப்படச் செய்தல் கல்வி இலாகாத் தலைவர் நூல் நிலையம் பிரசார வாகனங்கள் மூலமாய் முதியோர் கல்வி முன்னேற்ற மடையச் செய்தல் வேண்டும்.

திருமதி எல்லா கிரிப்பின் UNESCO பிரதிநிதியாக இந்திய யூனியன் அரசாங்கத்தின் சார்பில் தென்னிந்திய முதியோர் கல்வி முதல் அரங்கிற்கு வந்திருந்தார்கள்.

கிராம நன்னல உத்யோகஸ்தர்கள் முதியோர் கல்வி சம்பந்தமாக நூல்களை கிராமங்களில் சிறு சிறு நூல் நிலயங்களுக்கு அனுப்பச்செய்தல். நான்கு அங்குலமும் இரண்டு அங்குலமுள்ள படங்கள் அமைந்துள்ள பாடங்கள் ஒவ்வொரு சாவடிகளிலும் கிணறுகளிலும் சந்தைகளிலும் சுவர்களில் தொங்கவிடப் பட்டிருத்தல். தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தார் அத்தகைய சுவரில் ஒட்டத்தகுந்த படங்களை வெளி

யிட்டு கிராம முதியோர் கல்வி ஸ்தாபனங்கள் அவற்றை அடையச் செய்யவேண்டும். ஸ்தல ஸ்தாபன முதியோர் கல்விக் கமிட்டியினர் தங்கள் சொந்த முறையில் வர்ண சுண்ணாம்பாலோ, காகிதத்தாலோ எழுத்துக்களைச் செய்து கொள்ளலாம்.

பெண் பிரதிநிதிகளும்
திருமதி எல்லா கிரிப்பின் அவர்களும்

கிராமங்களில் மிகவும் முக்கியமான இடங்களில் அவசியமான செய்திகளைக் கரும்பலகையில் எழுதி யாவரும் காணத்தக்கதாய்ச் செய்யவேண்டும். அந்தந்த ஊர்களில் நடந்தேறிய விசேஷமான சம்பவங்களைக் குறித்து காகிதங்களில் அச்சிட்டோ வேறு வகையாலோ கல்வி கற்கும் முதியோர்க்கு அளித்திடச் செய்தல்.

பஞ்சாயத்துப் போர்டுக்கும், கூட்டுறவுச் சங்கத்துக்கும் பெட்ரோமாக்ஸ்லைட், பலகைகள், புத்தகங்கள், பென்ஸில்கள், படங்கள் இவற்றிற்காகப் பணம் செலவு செய்ய அதிகாரம் அளித்தல். இவ்விஷயத்தில் லோகல் போர்ட் இன்ஸ்பெக்டர், கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்ட்டர் உதவி செய்தல் வேண்டும்.

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தின் அதிகாரிகள் மந்திரியைச் சந்தித்து முதியோர் கல்விச் சாலைக்கு மின்சாரம் இலவசமாகப் பெறவும், பயிர்த்தொழிலுக்கு ஏதோ கொஞ்சம் குறைவாகப் பெறும்படியும் செய்ய வேண்டுதல்.

ஒவ்வொரு ஜில்லாவிற்கு பிரசார வண்டி ஏற்படுத்தி சிறந்த முறையில் பயிரிடுதல், மிருகங்களைப் பாதுகாத்தல், சுகாதாரம், சமூகக் கல்வி, சமூக முன்னேற்றக் கதைகள், இந்திய வாழ்க்கைக்கு ஏற்ப பல திரைப்படங்கள் காட்ட அரசாங்கத்தினரை வேண்டுதல்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு ரேடியோ அமைக்கச் செய்ய லோகல் போர்ட் அதிகாரிகளை வேண்டுதல். அதன் செலவை அரசாங்கம் ஏற்கவேண்டும். 5000 கிராமங்களில் ரேடியோ வைப்பதாயிருந்தால் முதியோர் கல்வி முன்னேற்றத்திற்கெனத் தனிமையாக ஒலிபரப்பும் ஸ்தலத்தையும் ஏற்படுத்த அரசாங்கத்தை வேண்டுதல்.

ரேடியோ, திரைப்படம் இல்லாத இடங்களில் ஜில்லா முதியோர் கல்விக் கமிட்டியினர், கிராம போன், ஒலிப்படம் இவற்றைக் கொண்டு சேவை செய்யலாம்.

கிராம முதியோர் கல்வி கமிட்டியின் ஆதரவில் பின்வருமாறு செய்யலாம்.

பஜனை, காலட்சேபம், பொதுஜனக்கீதம், கும்மி, கோலட்டம், நடனம், அபிநயங்கள், பரதநாட்டியம், நாடகங்கள், பாட்டுக்கச்சேரி முதலியவை மேலும் சிறப்பாக நடைபெறும் போது காட்சிகளுக்கு இரண்டு அணா, நான்கு அணா டிக்கட் (பிரவேசச்சீட்டு) வைத்து நடத்தலாம்.

உதவிசெய்யும் தொகுதிக் கமிட்டியாரின் சிபார்சுகள்

வியபார ஸ்தாபன சங்கங்கள் தங்கள் ஊழியர்களின் கல்வியறியாமையைப் போக்க வேண்டுதல்.

தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் வியாபார சங்க ஸ்தாபன நிர்வாக அங்கத்தினருக்கு ஒரு மகாநாடு நடத்த ஏற்பாடு செய்யச் செய்தல், அவ்வூழியர்களுக்கு ஏற்றவாறு முதியோர் கல்வியின் நிகழ்ச்சி முறையைத் தீர்மானித்தல்.

கூட்டுறவுச் சங்கங்கள் முதியோர் கல்வி ஸ்தாபனங்களுக்குப் பண உதவி அளிக்குமாறு வேண்டுதல். அதன் வரவு செலவுக்காக பொது நிதியிலிருந்து பணத்தை உபயோகித்தல்.

பயிற்சி மனோதத்துவக் கமிட்டியின் சிபார்சுகள்

பயிற்சி பெறாத முதியோர் கல்வி ஆசிரியர்கள் பயிற்சி பெற்று அவ்வூழியத்திற்குத் தகுதியாக்கத் தக்கதாய் மாற உதவி செய்தல்.

இப்போது மூன்று ஆண்டிற்கு அமைந்திருக்கும் பாட திட்டத்தை ஒரு ஆண்டுக்கு ஏற்றளவாகக் குறைத்தல்.

படிப்பறிவு சோதனைசெய்து நற்சாட்சிப் பத்திரம் வழங்க நான்கு மாதத்துக்கு ஒரு முறை வைத்து உத்யோகஸ்தரையோ உத்யோகஸ்தரல்லாதாரையோ அச்சோதனை செய்ய விடுத்தல்.

ஒன்று சேர்த்து செய்யும் கமிட்டியின் முடிவான சிபார்சுகள்

முதியோர் கல்விச் சங்கத்தின் முன்னேற்றம் இப்போது ஒரு உயர்நிலையை அடைந்திருக்கிறது. அதனால் பல படிகளிலும் ஒவ்வொரு ஸ்தாபகரை ஏற்படுத்தி ஒன்றையும் வீணாக்காமல் சிறந்த முறையில் நடைபெற்று நல்ல பலன்களைக் காணச் செய்தல்.

அத்தகைய ஸ்தாபகர்கள் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், தாலுக்காவிலும், ஜில்லாவிலும் ஏற்படுத்த வேண்டும். சிறந்த முறையில் நடைபெறும் ஸ்தாபனங்களோடு, தாழ்ந்த முறையில் நடைபெறும் ஸ்தாபனங்களை ஒன்று சேர்த்துவிட வேண்டும்.

ஜில்லா சமூக முதியோர் கல்விச் சங்கமும், நகர சமூக முதியோர் கல்விக் கமிட்டியும், கிராம சமூக முதியோர் கல்விக் கமிட்டியும் ஒன்று சேர்ந்த G. O. 2521 தேதி 9-8-1950 கல்வி சம்பந்தமாக ஆலோசித்த படி ஒன்று சேர்த்து ஊழியத்தை நடைபெறச் செய்தல்.

தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம், முதியோர் கல்விச் சங்கக் கௌரவ ஸ்தல ஸ்தாபகரின் உதவி கொண்டு அத்தகைய ஸ்தாபகர்களை ஏற்படுத்தும் வேலையில் ஈடுபடுதல்.

அத்தகைய ஸ்தாபகர்களின் தன்மைகள்; கடமைகள்.

(1) அந்தந்த இடத்திற்கு ஏற்றவாறு இவ்வூழியத்தில் பங்குபெற்ற யாவரோடும் ஒத்துழைத்தல்,

(2) அந்தந்த இடங்களுக்குள் ஊழியம் செய்யத் தகுந்ததாய் மேற்கூறிய G. O. சட்டத்தையும் சிறிது மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

இதற்காகவே முதியோர் கல்வி ஸ்தாபனங்களை மேற்பார்வை செய்வதற்காக நன்றாய்ப் பயிற்சிபெற்ற ஒருவரை சம்பளம் பெறுமலோ அல்லது கொடுத்தோ உத்தியோகத்தில் அமர்த்துதல். செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உபயோகிக்கலாம்.

மாதரின் விசேஷ பிரச்னைகளின் கமிட்டியினர்

அவர்கள் முன்னிலையில் கல்வியறிவும், சமூகக் கல்வியும், ஸ்திரீகள் மத்தியில் கிராமத்திலும் நகரத்திலும் விரைவாக வெற்றிபெறச் செய்யக்கூடும் என்னும் பிரச்னையை எழுப்பி விட்டனர்.

அவர்களுடைய சிபார்சுகள்

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தினின்று உடனே ஒரு விண்ணப்பம், எல்லா மாதர் சங்கங்களுக்கும், வேலை ஸ்தலங்களுக்கும், கார்ப்பரேஷன் முனிஸிபாலிடி வைத்திய சாலைகள், பெண் பாடசாலைகள், கல்லூரிகள் இவற்றில் படிப்பறியாத அதிகமான மாதர்களை வேலைக்கமர்த்தி, இத்தகைய ஊழியத்தில் அவர்கள் ஊக்கங்கொண்டு பெண்களுக்கு முதியோர் கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்தச் செய்தல்.

முதியோர் கல்வி ஊழியத்தில் மாதரும் பங்குபெறச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. பெண்கள் படியாதிருக்குமிடங்களில் ஆண்கள் தங்கள் பெண்களைப் படிக்க வைப்பது மிகப் பெரிய சேவையாகும். அப்போது சிறு பிள்ளைகளைக் கவனிக்க ஒழுங்குகள் ஏற்படவேண்டும்.

மாதர்களுக்குரிய முழுநேர ஊழியர்கள் வீடு வீடாய்ச் சென்று கல்வி கற்பித்து வருதல். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாயிருப்பதால் கொஞ்ச காலம் முதியோர் கல்வி சம்பந்தமாகப் பயிற்சி சுயதீனமாக ஊழியர்களுக்கு அளித்தல்.

ஒரு உபகமிட்டி ஒன்று பெண்களாலேயே நிர்மாணிக்கபட்டு பாடத் திட்டம் ஒழுங்கு முதலியவற்றை தீர்மானித்தல். பிறகு தமிழிலும், தெலுங்கிலும் வாசகங்கள் எழுதி மாதர் நன்னல இலாகா சஞ்சிகையில் வெளியிடுதல்.

(தொடர்ச்சி 2-வது ரேப்பரில் பார்க்கவும்)

தமிழ் எழுத்துகள் சீர்திருத்தம்

அரசாங்கத்தாரால் அமைத்த கமிட்டியின் சிபார்சுகள்

தமிழ் எழுத்துகள் சீர்திருத்தத்தை அரசாங்கம் ஒப்புக்கொண்டு இந்த சீர்திருத்த எழுத்துகளை அரசாங்க ரிகார்டுகளில் நடைமுறையில் கொண்டுவர வேண்டு மென்று உத்திரவிட்டிருக்கின்றனர்.

பள்ளிக்கூடப் புத்தகங்கள்

பள்ளிக்கூடங்களில் உபயோகத்திற்கான புத்தகங்கள் இந்த எழுத்தில் இருக்க வேண்டு மென்றும் அந்தப் புத்தகங்கள்தான் அங்கீகரிக்கப்படுமென்றும் அரசாங்கம் உத்திரவிட்டிருக்கின்றது.

பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்தச் சீர்திருத்த எழுத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருவதுபற்றி உத்திரவு பிறப்பிக்க வேண்டு மென்றும் அரசாங்கத்தார் உத்திரவிட்டுள்ளனர்.

உத்திரவு விபரம்

அரசாங்க உத்திரவின் முழு விபரம் பின் வருமாறு:—

தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தப் பிரச்னை சிறிது காலமாகச் அரசாங்கத்தார் யோசனையில் இருந்தது. இதுபற்றி பல சிபார்சுகளும் வந்திருக்கின்றன. இந்தப் பிரச்னையின் முக்கியத்தை உத்தேசித்து இதைப் பரிசீலனை செய்து முடிவுகூற அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமித்தனர். அதன்படி 1950-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் பின் கண்டவர் களடங்கிய கமிட்டியை அரசாங்கத்தார் நியமித்தனர்.

திருவாளர்கள் டி. எஸ். சொக்கலிங்கம், ரா. பி. சேதுப்பிள்ளை, எஸ். கோபாலன், தி. நா. பாலசுப்பிரமணியன், கே. சுவாமி நாதன், மு. வரதராஜன், தெ. பொ. மீனாட்சி சுந்திரம்.

தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தம் அவசியமா? அவசியமாயின் எந்த வழியில் சீர்திருத்தங்கள் செய்வது? ஆகிய பிரச்னைகளைப் பரிசீலனை செய்து சிபார்சு செய்யுமாறு கமிட்டியை அரசாங்கம் கேட்டுக்கொண்டது. 1950 ஆகஸ்ட் மாதம் அதன் அறிக்கையை அரசாங்கத்தாருக்கு அனுப்பியது.

இந்த அறிக்கை சென்னை சர்வகலா சாலைக்கும், அண்ணாமலை சர்வகலாசாலைக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும் அபிப் பிராயத்திற்கு அனுப்பப்பட்டு தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தம் அவசியமாயின் அது பற்றித்திட்டமான சிபார்சுகள் அனுப்ப வேண்டுமென்றும் அரசாங்கம் கோரியது இந்த ஸ்தாபனங்களிடமிருந்து கிடைத்த பதில்களிலிருந்து கமிட்டியின் யாதாஸ்து அங்கீகரிக்கப்படுவதாகவே அரசாங்கம கூறுகின்றது.

இந்த நிலைமையில் கமிட்டியின் சிபார்சுகளை அரசாங்கம் அங்கீகரிக்கின்றனது. எதிர்காலத்தில் இனிமேல் அரசாங்கம் எல்லா ரிகார்டுகளிலும் இந்தச் சீர்திருத்த எழுத்துக்கள்தான் உபயோகிக்கப்படும். பாட புத்தகங்கள் வெளியிடுவோர் இந்தப் புதிய எழுத்துகளைத் தங்களது புத்தகங்களில் அங்கீகரிக்கும்படி அவர்களை அரசாங்கம் கேட்டுக் கொள்ளுகின்றனர். இனிமேல் இந்த சீர்திருத்த எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட பாட புத்தகங்கள்தான் பள்ளிக்கூடங்களில் அங்கீகரிக்கப்படும் என்றும் அவர்களுக்கு அரசாங்கம் தெரிவிக்கின்றது.

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்தச் சீர்திருத்த எழுத்துக்களை அமுலுக்கு கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கும்படி கல்வி இலாகா அதிகாரியையும் அரசாங்கம் கேட்டு கொள்ளுகின்றது.

கமிட்டியின் அறிக்கை

கமிட்டியின் அறிக்கை வருமாறு:

சென்னை அரசாங்கத்தார் தம் எம். எஸ். நெம்பர் 527 (கல்வித்துறை) 20-2-1950 உத்திரவில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஸ்பெஷல் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினர்; தமிழ் எழுத்துக்களில் சீர்

திருத்தம் செய்யவேண்டுமா என்றும், செய்ய வேண்டுமானால் எவ்வாறு சீர்திருத்தம் செய்ய வேண்டு மென்றும் ஆராய்ந்து தெரிவிக்குமாறு கோரினர்.

1950-வருஷம் மார்ச்சு, ஜுலை மாதங்களில் சில நாட்கள் கமிட்டியார் ஏற்ற முறை கூடிப் பலவகையாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆராய்ந்தனர்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிச் சென்ற சில ஆண்டுகளாகவே பொதுமக்கள், பத்திரிகைகள், அரசாங்கத்தார் ஆகிய எல்லோரும் எண்ணி வருகின்றார்கள். தனிப்பட்ட அறிஞர் பலரும், பல கழகங்களும் இது பற்றிப் பல வழிகளை எடுத்துக் காட்டியுள்ளார்கள். 1947 ஆகஸ்டு 29-ல் கல்வி அமைச்சராயிருந்த திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் நான்கு பேர்கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தி இதைப்பற்றி ஆராயச் செய்தார். அந்தக் கமிட்டி 1948 பிப்ரவரி 10-ல் அதன் முடிவை அறிவித்தது. அதற்குப் பிறகும், பொது மக்களும் பத்திரிகைகளும் இதைப்பற்றி பேசி ஆராய்ந்ததும் உண்டு.

இப்போது ஏற்படுத்தப்பட்ட இக்கமிட்டியார் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி முழுதும் பலவகையாக ஆராய்ந்தார்.

ஆராய்ந்து முடிவு காணவேண்டிய பகுதிகள் இரண்டு: 1. தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமா என்பது; 2. செய்ய வேண்டுமானால் எவ்வகையில் சீர்திருத்த வேண்டுமென்பது.

இந்த இரண்டில் முதலாவதைப் பற்றி ஒரு மிக்க கருத்தே உள்ளது. இப்போது தமிழில் அச்சிடுவதற்குத் தேவைப்படும் தமிழ் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை மிகுதியாக இருப்பதால் எழுத்துக்களைக் குறைத்து அளவு படுத்தவேண்டுமென்றும், உயிர் மெய் யெழுத்துக்களுக்கு உரிய குறியீடுகளில் கூடிய வரையில் ஒருவகைப்பட்ட ஒழுங்கு இருக்க வேண்டுமென்றும். கமிட்டி பொதுவாக ஒரு முடிவுக்கு வந்தது. ஆகையால் அச்சுக்களையில் பெறும் நன்மைகளையும் எழுத்துக்களைக் கற்பதில் உள்ள இடர்களைப் போக்கக் கருதியும் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் ஆகின்றது.

எவ்வகையில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதே இனிக் கருதவேண்டியது. கருத்து வேறுபாடுகளும் பல இதில் உள்ளன.

மாறுதல் எதுவும் செய்யப்படும் பொழுது, இப்பொழுதுள்ள தமிழ் எழுத்து முற்றிலும் புதிதாகத் தோன்றுமாறு அவ்வளவு இருக்கக் கூடாது என்பதும், பொது மக்கள் புதிய எழுத்துக்களை எளியதாக கற்றுக் கொள்வதில் இடர்படக்கூடாது என்பதும், கமிட்டியின் கருத்தாகும். ஆகையால் பொதுமக்கள் பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளக்கூடிய வகையிலும், அச்சுடைப், ஒரேவகை ஒழுங்கு முதலிய வைகளுக்காகக் குறைந்த அளவு மாறுதலாக இருக்கக்கூடிய வகையிலும், எழுத்துச் சீர்திருத்தத் திட்டம் வகுக்கக் கருதினார்கள். கமிட்டியார் முடிவாகச் செய்த சிபார்சுகளாவன :

I. உயிர் எழுத்துக்கள் :—மாறுதல்கள் இரண்டு.

(i) உயிர் நெடில் "ஈ" இப்போது உள்ள "இ" என்னும் குறில் எழுத்துக்கு மாறுபட்ட வடிவமாக உள்ளது. "இ" என்று சிறுபான்மையாக வழங்கி வரும் மற்றொரு வடிவம். இதற்குத் தகுந்த நெடிலாகக் கொள்ளத் தக்கது. குறிலின் வடிவத்தில் சிறு மாறுதலாக இருப்பதால் அது கற்பதற்கும் எளிதாகும்.

(ii) ஔ—இந்த வடிவம் சில இடங்களில் ஒருவகை மயக்கத்திற்கு இடம் தருகிறது. 'ள' என்னும் மெய்யெழுத்தின் வடிவத்தை 'ஓ' என்னும் உயிர் எழுத்தோடு சேர்ப்பதால் இவ்வாறு மயங்க நேரிடுகிறது. ஆகையால் 'ள' என்னும் மெய்யெழுத்துக்கு வேறுபட்டதாகக் காணுமாறு அதை 'ள' என்று எழுதலாம்.

மற்ற உயிர் எழுத்துக்களின் வடிவங்கள்— அ, ஆ, இ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, என இப்போது உள்ள வாறே இருக்கலாம்.

II. மெய்யெழுத்துக்கள் :— மெய்யெழுத்துக்கள் மேலே இடப்படும் புள்ளியோடு எழுதப்படுகின்றன. புள்ளி இல்லையானால் அவை 'அ' என்னும் உயிர் சேர்ந்த உயிர் மெய் எழுத்தாகும். மேலே உள்ள புள்ளியை அங்கிருந்து தள்ளி மெய்யெழுத்தின் வலப்

பக்கத்தின் மேற்பகுதியில் தனி எழுத்தாக எழுதலாம் என்று ஒருவழி கூறப்பட்டது. இவ்வாறு செய்வதால் எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும்; எனினும் இது அடிப்படையான பெரியமாறுதலாகும் என்று கருதப்பட்டது. ஆகையால் இப்போது மேலே புள்ளியிடு முறையே இருக்கலாம்.

III. உயிர் மெய்யெழுத்துக்கள் :—ஒரே வகை ஒழுங்கு ஆக்குவதற்காகவும், எழுத்து வடிவங்களை எளிமை ஆக்குவதற்காகவும், கூடிய வரையில் உயிரெழுத்துக்களின் குறியீடுகளைத் தனியே பிரித்து மெய்யெழுத்துக்களின் பக்கத்தே எழுதுவதும், ஒவ்வோரு உயிர் எழுத்திற்கும் ஒரே குறியீடுவைத்துக் கொண்டு ஒழுங்காக எழுதுவதும் நன்மையாகும்.

ஆகவே “ ஆ ” என்னும் உயிர் நெடிலின் குறியீடாக ‘ா’ என்பதையே ஒரே ஒழுங்காக எல்லா மெய்யெழுத்துக்கும் சேர்க்கலாம்.

இவ்வாறே இன்னும் குறியீடுகளையே இ, ஈ, என்னும் குறில் நெடில் உயிர்களை உணர்த்துவதற்காக மெய்யெழுத்துக்களை அடுத்து (இன்றுள்ளவாறு மெய்யெழுத்துதோடு சேர்க்காமல் தனியே பிரித்து) எழுதலாம்.

எ, ஏ, ஐ, என்னும் உயிர்களுக்கும் இவ்வாறே முறையே ெ, ே, ை என்னும் குறியீடுகளை அமைத்துக் கொள்ளலாம்.

ஔ என்னும் உயிர் எழுத்திற்காக ள என்னும் வடிவத்தை ள என்று சிறிது வேறுபடுத்தி எழுதலாம்.

எஞ்சியுள்ள உயிர்கள் உ, ஊ, இரண்டுமாகும். இப்போது ஒவ்வொரு மெய்க்கும் ஒவ்வொரு வகைக் குறியீடு சேர்த்து உயிர்மெய்யாக எழுதப்படுகிறது. அதனுல் இவற்றின் குறியீடுகளின் ஒழுங்கு முறையில்லை. ஆயினும் இப்போது உள்ள குறியீடுகளையே இன்னும் சில காலம் மாறுதல் இல்லாமல் எழுதி வருதல் நல்லது என்றும், தேவையானல் வருங்காலத்தில் இவற்றிற்கும் ஒழுங்கான ஒரு வகைக் குறியீடுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும் கருதப்பட்டது.

தமிழ் எழுத்துக்களை ஒழுங்கு படுத்துவதற்காகவும், அச்சுக் கோர்க்கும் யந்திரங்களிலும், டைப் யந்திரங்களிலும் வசதியாக அமைப்பதற்காகவும் பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளக் கூடிய வகையில் குறைந்த அளவு மாறுதல்களே கமிட்டியால் வகுக்கப்பட்டவையாகும்.

சீர்திருத்தம் செய்யப்பட்ட தமிழ் எழுத்துக்களும், அந்த எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்பட்ட ஒரு பக்கமும் இணைப்பில் உள்ளன.

டி. எஸ். சொக்கலிங்கம்,
கன்வீனர்.

இணைப்பு

உயிர் எழுத்துக்கள் :—

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ,
ஒ, ஓ, ஔ,
ஆயுதம் ஃ

மெய்யெழுத்துக்கள் :—

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல்
வ் ழ் ள் ற் ன்

அகர உயிர சேர்ந்த உயிர்மெய் யெழுத்துக்கள்:—

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன.

மற்ற உயிர்மெய் எழுத்துக்கள்:—

உ, ஊ, தவிர மற்ற எல்லா உயிர்களுக்கும் ஒருவகைக் குறியீடுகளே வழங்கலாம்.

எடுத்துக்காட்டாக :— ண என்ற மெய்க்கு

ஆ	ணா
இ	ணி
ஈ	ணீ
எ	ணெ
ஏ	ணே
ஐ	ணை
ஒ	ணொ
ஓ	ணோ
ஔ	ணௌ

உ—கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு.

ஊ—கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ றூ னூ.

ஆக சீர்திருத்தப்பட்ட முறைப்படி தமிழ் எழுத்துக்களின் தொகை 91.

இன்று உள்ளவாறு தமிழ் எழுத்துக்களின் தொகை—133.

செய்தி சுருள்

மதுரை, இராமநாதபுரம் முதியோர் கல்வி ஊழியர்கள் மகாநாடு

திரு. ராமா அவர்களின் வரவேற்புரை

மதுரை-நாமநாதபுரம் ஜில்லா முதியோர் கல்வி மகாநாடு இன்று காலை மதுரை ஸௌராஷ்டிர ஹைஹ ஸ்கூல் பிரார்த்தனை மண்டபத்தில் வெகு உற்சாகத்துடன் ஜுன் 29, 30 தேதிகளில் நடைபெற்றது. திரளான ஆண், பெண் முதியோர் கல்விப் பிரசாரகர்கள் கலந்துகொண்டனர்.

மகாநாடு ஆரம்பத்தில் பிரார்த்தனைக்குப் பின் திரு. என். எம். ஆர். சுப்பராமன், எம். எல். ஏ. தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். ஜனநாயகக் குடியரசு அரசியல் சட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நமது நாட்டில் மக்கள் தங்கள் உரிமையையும், பொறுப்பையும் சரியானபடி உணர்ந்து, உபயோகபடுத்தினால் தான் குடியரசு பலப்படுமென்றும், சாதாரண மக்களின் அறிவும் ஆற்றலும் பெருக வேண்டுமென்பதற்காக முதியோர் கல்விப் பிரசார வேலை நடப்பதாகவும், எழுத்தறிவு கொஞ்சமிருப்பினும், விஷய ஞானம் அதிகம் வேண்டுமென்றும், நம் நாட்டில் விஷயம் தெரியாதவர்களே இல்லை என்ற நிலைமை ஏற்பட வேண்டுமென்று திரு. சுப்பராமன் குறிப்பிட்டார்.

மகா நாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. டி. கே ராமா (மதுரை முனிசிபல் சேர்மன்) யாவரையும் வரவேற்றுப் பேசினர். முதியோர் கல்வி பிரசாரத்தை மக்கள் சமுதாய இயக்கமாக ஜில்லா பூராவிலும் நடத்த இம் மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தை நீண்ட காலத்திற்கு முன்பே தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம் ஆரம்பித்திருப்பினும் வெகு காலம் விளம்பரத்திலும் வெறும் பிரசாரத்திலும் சென்றிருக்கிறது. எனது அபிப்பிராயத்தில் தஞ்சாவூர் மகாநாடு முதல் தான் முதியோர் கல்வி இயக்கம் காரியாம்சத்தில் நடைபெறுவதாக இருக்கிறது. சர்க்காரும் இப்பொழுது அக்கரை எடுத்திருக்கிறது. சர்க்கார் போட்டிருக்கிற திட்டத்தைப் பார்த்தால் 40 வருடத்தில்தான் எல்லோரும் கற்றவர்களாக இருப்பர். அதை 5 வருடத்திற்குள் முதியோர் கல்வி பரப்ப வேண்டியதவசியம், அவ்விதம் திட்டம் தயாரிக்க வேண்டுமானல் சர்க்கார் விதிக்கும் பற்பல நிபந்தனைகளைத் தளர்த்தவேண்டும். வாசகசாலை அபிவிருத்தி திட்டம் வரவேற்கப்படவேண்டியதே. ஆனல் முதியோர் கல்விக்கு முதல் ஸ்தானமளித்து, பின்னர் வாசகசாலை அபிவிருத்தி விஷயமாக கவனித்தால் நல்லது. முதியோர் கல்வியையும் ஒரே இலாகாவிடம் கொடுத்தாலோ அல்லது நகர சபைகள் வசம் கவனிக்கும்படி செய்தாலோ சர்க்காருக்கு செலவு குறையும். ஓய்வு நேரங்களிலும், 55 வயதிற்குமேல் வயதுள்ள அறிவாளிகளும் நாட்டுச் சேவையில் பங்கெடுக்கவேண்டும். முதியோர் கல்வி இயக்கத்தில் ஈடுபடுவர்களுக்கு 4 அல்லது 5 மாதங்களில் இப்பொழுது ஏற்பட்டுவரும் நம்பிக்கைக்குறைவைப்போக்க இம்மகாநாட்டில் திட்டம் வகுக்க வேண்டும். ஜில்லாவாரியாக முதியோர் கல்வி பயிற்சிப் பள்ளிகளை சார்க்கார் ஏற்படுத்த வேண்டும். கட்டாயம் முதியோர் கல்வியை சர்க்கார் அமுல் நடத்தலாம். எஸ். எஸ். எல். ஸி. அல்லது அதற்குமேல் படித்தவர்கள் குறைந்தபட்சம் ஐந்து பேர்களுக்காவது முதியோருக்கு கல்வி கற்பித்து, தேர்ச்சி பெறச் செய்தாலொழிய சர்க்கார்கார் உத்தியோகம் இல்லை என்று நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் முதியோர் கல்வி இயக்கம் துரிதமாக பலனடையும். சர்க்கார் அதிகாரிகள் இந்த இயக்கத்தில் பங்கெடுக்க யாதொரு தடையும் இருக்கக்கூடாது என்று திரு. டி. கே. ராமா தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார். உணவு மந்திரி கனம் திரு. J. L. P. ரோச்-விக்டோரியா அவர்கள் மகாநாட்டை திறந்து வைத்தார்.

(மகாநாடு முழு விபரம் அடுத்த இதழில்)

பொட்டப்பனையூரில் முதியோர் கல்வி பாடசாலைத் திறப்பு விழா

பொட்டப்பனையூர் கிராமத்தில் முதியோர் கல்வி பாடசாலைத் திறப்பு விழா திரு. இ. மா. கோபால கிருஷ்ணக் கோனர் தலைமையில் ஜுலை, மாதம் 29-ந்தேதி சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் கலந்துகொண்ட மந்திரி திரு. ரோச்-விக்டோரியாவுக்கு மதுரை முனிசிபல் கவுன்சிலர் திரு. வி. எல். இராமசாமி அக்கிராமக் கூட்டுறவு சங்கம் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். மதுரை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்க் காரியதரிசி திரு. வி. அழகப்பன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

பின்னர் மந்திரி திரு. ரோச்-விக்டோரியா முதியோர் கல்வி பாடசாலையைத் திறந்து வைத்தார். கல்வியின் அவசியத்தைப் பற்றியும் நகர ஊழியர்களும் பிரமுகர்களும் கிராம சேவையிலீடுபட வேண்டுமென்றும் கிராம மக்கள் ஒற்றுமையாக இருந்து முன்னேற வேண்டுமென்றும் வற்புறுத்தியதுடன் அக்கிராமப் பாடசாலை அபிவிருத்தி அடைய ஒத்துழைத்துவரும் மதுரை ஜில்லா மத்திய கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளைப் பாராட்டினர்.

மதுரை நகரசபைத் தலைவர் திரு. டி. கே. ராமா திரு. எம். ஜி. பத்மநாப முதலியார் கிராமமக்களின் ஊக்கத்தைச் சிலாகித்து கல்வி அறிவுமூலம் விவசாய அபிவிருத்தி சாத்யம் என்பதை விளக்கினர்.

தலைவரின் முடிவுரைக்குப் பின் கிராம ஊழியர் திரு. டி. ஆர். ராகவன் வந்தனோபசாரம் கூற விழா முடிவுற்றது.

மாயனூர் அருகில் முதியோர் கல்விப் பிரசாரம்

மாயனூர் சர்க்கார் முதியோர் கல்வி ஆசிரியர் பயிற்சிசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் மாயனூருக்கு அருகில் உள்ள காட்டூர் சென்று ஒரு முதியோர் கல்வி வகுப்பு ஆரம்பித்து வைத்தனர். சென்னை சர்க்கார் சமூகக் கல்வி மோட்டார் வண்டி அதுசமயம் அங்கு வந்திருந்தது. ஜனங்களுக்கு கல்விப் படங்கள் காண்பிக்கப்பட்டன. சமூகக் கல்வி மோட்டாரைச் சேர்ந்த ஆபீஸர் திரு. கே. எஸ். குமாரகிருஷ்ணன் முதியோர் கல்வியின் முக்யயத்வப்பற்றி பேசினர். மாயனூர் சர்க்கார் முதியோர் கல்வி பயிற்சிசாலை தலைமை ஆசிரியர் திரு. ஏ. வி. ஸ்ரீநிவாஸன் இனி நடக்கவிருக்கும் முதியோர் வகுப்புக்கு எல்லோரும் தவருது வந்திருந்து பயன் பெற வேண்டுமென கேட்டுக்கொண்டு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கீழ்கோதாவரி ஜில்லா முதியோர் கல்வி இயக்கத்துக்கு மகத்தான ஆதரவு

மக்கள் ரூ. 16,000 நன்கொடை அளித்தனர்

ஆந்திர தேசத்திலுள்ள, கீழ் கோதாவரி ஜில்லாவின் தலைநகரமாகிய காக்கிநாடாவில், இந்த ஜில்லாவின் தென்னிந்திய முதியோர் கல்வி கௌரவ நிர்வாகஸ்தர் திரு. ராஜா ராவ் அவர்களின் முயற்சியால் குமாரி ஹேமாமாலினியின் நடனம் ஜூலை மாதம் 15-ம் தேதி மாலை தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத்தின் பொது காரியதரிசி கனம் திரு. J. L. P. ரோச்-விக்டோரியா அவர்களின் தலைமையில் முதியோர் கல்வி இயக்க உதவிக்காக நடைபெற்றது. அவ்வமயம் வசூலிக்கப்பட்ட ரூ. 16,000 கொண்ட பண முடிப்பு ஒன்றை கனம் ரோச்-விக்டோரியா அவர்களிடம் தென்னிந்திய முதியோர் கல்வி இயக்க உதவிக்காக மக்களின நன்கொடையாக அளிக்கப்பட்டது.

கனம் திரு. ரோச்-விக்டோரியா அவர்கள் தன் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டு ஜில்லா கலெக்டர், திரு. V. V. சுப்பிரமணியம், அவருடைய உதவி உத்தியோகஸ்தர்கள் திரு. ராஜா ராவ் அவர்கள், முதலியோரின் முயற்சியை மிக பாராட்டி கிழக்கு கோதவரி ஜில்லா மக்களுக்கு தன்நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

சென்னை நகர முதியோர் கல்வி முதல் மகாநாடு

சென்னை நகர முதியோர் கல்வி மகாநாடு 1951-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6, 7 தேதிகளில் சென்னைநகரில் நடைபெறும். திரு. T. J. R. கோபால் அவர்களை மகாநாட்டு வரவேற்பு குழுவின் தலைவராகவும், திரு. P. S. கிருஷ்ணசாமி அவர்களை உபதலைவராகவும், திரு. A. திருஞான சம்பந்தம் அவர்களை பொதுக்காரியதரிசியாவும், மற்ற இருபத்திமூன்று நபர்களை குழுவின் அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இம்மகாநாட்டுக்கு மகா சந்நிதானம் திருவாடுதுரை மடத்து தலைவர் அவர்களை தவிருல் Dr. P. சுப்பராயன் அவர்களை தலைமை வகிக்கவும், மேன்மை தங்கிய கவர்னர்

அவர்களை மகாநாட்டை துவக்கிவைக்கவும் கோர தீர்மானித்துள்ளது. மகாநாட்டின் ஆக்க வேலைகளை திறம்பட துரிதமாகச் செய்ய பிரச்சார வேலைகளை கவனிக்கவும், வரவு செலவு திட்டங்களை கவனிக்கவும் இரு கமிட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய முதியோர் கல்விச் சங்க நிர்வாகஸ்தர்களின் தென் ஆற்காடு ஜில்லா சுற்றுப்பிரயாணம்

திரு. H. S. பால், தென் ஆற்காடு ஜில்லா கலெக்டர் அவர்களின் அழைப்புக்கிணங்க திருவாளர்கள் T. J. R. கோபால் தென்னிந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாக காரியதரிசியும், S. ஐராவதம், விளம்பர அதிகாரியும் தென் ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த செஞ்சி தாலுக்கா, திண்டிவனம் தாலுக்கா, கடலூர் தாலுக்கா, காடாம் புலியூர், பிர்கா, திருக்கோயிலூர் தாலுக்கா முதலியவைகளிலுள்ள கிராமங்களில் அமைக்கப்பட்ட பல முதியோர் கல்வி கழகங்களையும், அதன் ரிகார்டுகளையும் பார்வையிட்டார்கள். இவர்களின் சுற்றுப்பிரயாணத்தின் முழுவிபரங்களும், தென் ஆற்காடு ஜில்லாவில் முதியோர் கல்வி இயக்கம் எவ்விதம் நடைப்பெறுகின்றது என்பதையும் அடுத்த இதழில் தரப்படும்.

ஆனைமலையில் முதியோர் கல்வி இயக்கம்

பொள்ளாச்சி தாலுக்கா முதியோர் கல்வி கமிட்டியின் காரியதரிசி திரு. பி. எஸ். சுப்பையன் எழுதியதாவது: 153 சதுரமைல் பரப்பு கொண்ட ஆனைமலைக் குன்றுகளில் காப்பி, டீ முதலிய விளைபொருள்கள் சிறந்தவை. ஜனத்தொகை 64,000. வாள்பாறை என்பது அதன் மத்திய நகரம். பொள்ளாச்சியிலிருந்து 140-வது மைலில் உள்ளது. பஞ்சாயத்து போர்டு ஜில்லா அதிகாரி ஜனப் அபுசாயப் அவர்களுடைய ஒத்துழைப்பிற்காக நன்றி செலுத்துகிறோம். அங்கே முதியோர் கல்வி அதிக முன்னேற்றமடைந்துள்ளது. ஜில்லா கல்வி அதிகாரி திரு. வி. டி. டைடஸ், பொதுக் கூட்டத்தில் தலைமை வகிக்க, திரு. ஜே. பால் ஜேசுதாசன் பிரசங்கம் செய்தார். அப்போது மற்றும் பல கல்விச்சாலைத் தலைமை ஆசிரியர்களும் பிற பிரமுகர்களும் பங்கு எடுத்துக் கொண்டனர். ஜனப் அபுசாயப் பல முதியோர் கல்விச் சாலைகள் ஏற்படுத்த பள்ளிக்கூட மானேஜர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிக்கை அனுப்பினர். திடீரென்று முதியோர் கல்விச் சாலைகளைப் போய்ப் பார்த்ததில் யாவும் சாதாரணமாக நடைபெற்று வந்தது.

அரசாங்க அறிக்கை

டி. எஸ். எல். சி. ஆசிரியர்களை முதியோர் கல்வி இயக்க ஆசிரியாராக நியமித்தல்

சென்னை அரசாங்கம் (கல்வி இலாக்கா) இனி டி.எஸ்.எல்.சி. ஆசிரியர்களை முதியோர் கல்வி ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளலாம் என்று G. O. நெ. 951, தேதி 16 ஏப்ரல் 1951-ல் அறிவித்திருக்கிறது.

கல்வி இலாக்கா, மாகாண கல்வி இலாக்கா அதிகாரியின் பின்வரும் ஆலோசனைகளை அரசாங்கம் அங்கீகரிக்கிறது.

(1) டி. எஸ். எல். சி. ஆசிரியர்கள் முதியோர் கல்வி இயக்க ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம்.

(2) முதியோர் கல்வி இயக்க பயிற்சி இன்றி 31-5-'52 வரை அவர்களை முதியோர் கல்வி கழகங்களில் பங்கு எடுத்துக் கொள்ளச் செய்யலாம்.

படியாதவர் படும்பாடு

வெள்ளித்திரைப் படம் கூடிய சீக்கிரம் வெளிவரும்

தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அளவு கடந்த ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

காந்தி ஆதாரப் பாடசாலை

திண்டிவனம் தாலுக்கா, கீழ்சிவிரி கிராமம்

வயது வந்தோர் கல்விக் கழக ஆண்டு நிறைவு விழா

11-8-'51 சனி யன்று, தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் திரு. H. S. பால் அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடந்தது. காலையில் ஆதாரப் பாடசாலை குழந்தைகளும், வயது வந்தோர் பயிற்சியாளர்களும், சேர்ந்து, திரு. A. பொன்னப்ப நாயுடு அவர்கள் தலைமையில் ஊர்வலம் வந்து கொடி ஏற்று விழா நடந்தது. மாலை 5 மணிக்கு விழாக் கூட்டம் ஆரம்பமாயிற்று. சுற்றுப்புறக் கிராம வாசிகளும், திண்டிவனம் நகரவாசி களும் அனேகர் தாலுக்கா, ஜில்லா உத்தி யோகஸ்தர்களும் விழாவில் கலந்து கொண் டார்கள்.

ஆசிரியர் திரு. ஜெ. பாலசுந்தரம் அவர்கள் எல்லோரையும் வரவேற்றி பேசினார்கள். இந்தப் பாடசாலையை ஜில்லா கல்வி அதிகாரி திரு. C. கணேசமூர்த்தி அவர்கள் 29-7-'51 அன்று ஆரம்பித்து வைத்தார்கள். ஆண்டு பூர்த்திய பிறகு இந்த விழாவை கொண்டாடு கிறோம். இந்த ஜில்லாவில் முதியோர் கல்வி இயக்கம் திறமையாக நடப்பதற்குக் காரணம் ஜில்லா கலெக்டர் அவர்களே. ஆகவே அப் படிப்பட்ட பேர் ஆர்வம்படைத்த அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகிக்க வேண்டு மென்று விரும்பி அழைத்தேன். அதன்படி அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர் களையும் மற்றும் வந்திருக்கும் எல்லா உத்தி யோகஸ்தர்களையும், தென்னிந்திய வயது வந் தோர் கல்வி கழகத்தின் காரியதரிசி அவர் களையும், இதர கிராம வாசிகளையும் மன முவந்து வரவேற்கிறோம். இவ்விழாவிற்கு கலெக்டர் அவர்கள் தலைமை வகித்து, சிறப் பாக நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள் வதாக பேசி முடித்தார்கள்.

தலைவர் பிரசங்கம்:—கீழ்சிவிரி பாடசாலை சம்பந்தமாக எனக்கு வந்திருக்கும் அறிக் கைகளை பார்த்து ஓரளவு அறிந்திருக் கின்றேன். ஆசிரியர் சொல்லவும் கேட்டு வரும் பொழுது தாலுக்கா உத்தியோகஸ் தர்கள் இப்பாடசாலை சம்பந்தமாக புகழ்ந்து சொல்லிக்கொண்டு வந்தார்கள். கேட்க மிக்க சந்தோஷமாக இருந்தது. இங்கு வந்து பார்த்த பிறகும் இங்குள்ள ஆசிரியர்கள் செய் திருக்கும் வேலை மிக அபாரமாகவே தெரி கிறது. இதை இங்குள்ள கிராமவாசிகள் அதிகமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வயதில் முதிர்ந்த அனேகர் இந்தப் பாட சாலையில் சேர்ந்து படித்து பயனடைவதை நான் எதிர்ப்பார்க்கிறேன். இந்தப் பாட சாலைக்கு உள்ளூர்வாசிகளும், நகரவாசிகளும், சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களும் அதிக உதவி செய்ய வேண்டும் என்று கூறி முடித் தார்கள்.

பாடசாலை மாணவர் திரு. மாணிக்கம் அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார்கள். ஆதாரப் பாடசாலை குழந்தைகள் கலெக்டர் அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார்கள்.

திரு. T. J. R. கோபால் அவர்கள் பேசி யது:—தென்னிந்தியாவில் முதியோர் கல்வி இயக்கம் நடைமுறையில் இருக்கிறது. 1938-ம் ஆண்டுக்கு பிறகுதான் முதியோர் கல்வி ஆரம்பமாயிற்று. 1950-ம் வருஷத்தில் எல்லா இடங்களிலும் நன்றாக பரவி பலனடைந்து இருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவில் கலெக் டர் திரு. H. S. பால் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியால் மிக சிறப்பாக நடைபெறுகிறது. 4,000 ரூ. செலவு செய்து 2000 பேர் படித்திருக்கிறார்கள். இந்த பணம் சர்க்கார் கொடுக்கவில்லை. பொது மக்களிடம் நன்கொடையாக வசூலித்துப் 700 பாட சாலைகள் நடக்கின்றன. இந்தப் பெருமை கலெக்டர் அவர்களையே சாரும். அவர் பட்டம் பதவிக்காகவோ அதிக சம்பளம் பெருவதற் காகவோ இந்த வேலையை ஏற்றுக்கொண்டு செய்யவில்லை. உள்ளத்தில் சேவை மனப்

பான்மையுடன் அபாரமாக செய்துகொண்டு இருக்கிறார்கள். இதை ஆசிரியர்களும், பொது மக்களும் நன்கு பயன் படுத்திக்கொண்டு, எழுதப்படிக்க தெரியாமல் ஒருவரும் இருக்கக் கூடாது என்ற நிலைமை உண்டாக வேண்டும் என்று கூறினார்கள்.

திரு. M. ராமகிருஷ்ண ரெட்டியார் பேசியது :—இந்த நாடு முழுவதும் வயது வந்தோர் கல்வி இயக்கம் முக்கியத்வம் பெற்றுள்ளது. ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில், அகில இந்திய கல்விச் சங்க காரியதரிசி திரு. ஹரிநாயகம் அவர்கள் குறிப்பாக பேசினார்கள். கல்விப் பெறுவதன் மூலம் சமூக அறிவு, அரசியல் ஞானம், பொருள் அபிவிருத்தி இவைகள் கற்பிக்கப்பட வேண்டும். படிக்கத் தெரியாத வயது வந்தோர் எல்லோரும் கல்வி அறிவு பெறவேண்டும்.

இந்த கிராம சம்பந்தப்பட்ட வரையில் 2-வருஷத்திற்கு முன்பிருந்த நிலைமைக்கும், இன்று பார்க்கிறபோது எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. திறமையான ஆசிரியர், தம்முடைய சொந்த நலனை விட்டு, மக்களிடத்தில் பழகி மக்களை ஊக்கிவிப்பதனால் நல்ல பலனை காண்கிறோம். இந்த கிராம வாசிகள் நண்பரை பயன் படுத்திக் கொள்ள தெரியாமல் விரோத மனப்பான்மையுடன் பழகிக் கொண்டிருப்பதை கேட்க, வருத்தமாகவே யிருக்கிறது. இந்தக் காலத்திற்கு இது பொருந்தாத விஷயம் என்று விரிவாக பேசினார்கள். வந்தனோபசாரம் கூறி, வாழ்த்துப் பாடி கூட்டம் இனிது முடிந்தது.

2224710



தென்னிந்திய முதியோர் கல்வி அரங்கின் தலைவர் உயர் திரு. ஜே. எல். பி. ரோச்-விக்டோரியா, UNESCO பிரதிநிதி எல்லா கிரிப்பன், சென்னை அரசாங்க கல்வி இலாகா காரியதரிசி, திரு. K. M. உன்னித்தன், அரங்கின் அதிகாரிகள் கொண்ட புகைப்படம்.

இரண்டாம் பகுதி

ஐந்தாம் பாடம்

கத்தி

க	கதை	கட்டி	கா
	காது	கெட்டது	
கி	குடை	கேட்டது	கீ
	கூடு	கொட்டை	
	கை	கோட்டை	
கு			கூ
	குத்தகை பேசு		
கெ	காட்டுக் கட்டை		கே
	படக் காட்சி		
கொ	கெட்டிக் காப்பு		கோ
	கூட்டுத் தொகை		

கை கௌ க்

புதுக் கொட்டகை கட்டு
கொட்டகை கட்ட குத்தகை பேசு
கொசுக் கடி கெடுதி

ஆறாம் பாடம்

நாக்கு

ந	நகை	நத்தை	நா
	நாடு	நீட்டு	
நி	நிதி	தந்தி	நீ
	நீதி	பந்து	
	நொடி	பூந்தி	
நு			நூ
	நடை பாதை		
நெ	நாட்டுச் சேதி		நே
	நிதி தேடு		
நொ	சந்தைக் கடை		நோ
	சாந்துப் பொட்டு		

நை நௌ ந்

நாட்டுச் சேதி பேசு
சொந்த நாட்டுக்குப் பாடுபடு
நாட்டைக் காட்டிக் கொடுக்காதே

படிக்கும் தொண்டரின் பெயரும், விலாசமும் } ....

படிப்பிப்பவரின் பெயரும், விலாசமும் } ....

ம ந் தை

ம	மடு	மாடம்	மா
	மாடு	மெத்தை	
மி	பூமி	மொட்டை	மீ
	மூடு	மை	
	மேடு	பாம்பு	
மு			மூ
	மாட்டு மந்தை		
மெ	பூ மொட்டு		மே
	மாடு கட்டு		
மொ	மைக் கூடு		மோ
	பாம்புக் கடி		

மை மௌ ம்

மாட்டுக் கொட்டகை கட்டி
முடிந்ததா ?
மாடு பாம்பை மிதித்தது
பாம்பு மாட்டைக் கடித்தது

ப ழ ம்

ழ	பழி	பழுது	ழா
	பாழ்	மெழுகு	
ழி	புழு	கிழி	ழீ
	கோழி	தமிழ்	
	தழை	கொழுப்பு	
ழு			ழூ
	தாழம் பூ		
ழெ	தமிழ்ப் பாடம்		ழே
	முழுப் பழம்		
ழொ	கோழிக் கூடு		ழோ

ழை ழௌ ழ்

நமது மொழி தமிழ் மொழி
தமிழ்ப் பாடம் படிக்கப் பழகு
பாடிப் படிக்கப் பழகிப் புகழ் தேடு

மூன்றும் பகுதி

நம் சுதந்தர இந்தியா

— கோபால் —

நாம் வசிக்கும் நாட்டிற்கு இந்தியா என்று பெயர். நம் நாடு உலகத்தில் சைனு, ரஷ்யா முதலிய நாடுகளைப்போல் ஓர் பெரிய நாடு. இதன் மக்களின் எண்ணிக்கை (ஜனத்தொகை) இன்று 40 கோடிக்கு மேல் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இது உலகத்தின் மக்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பாக மாகும். அதே மாதிரியாக நம் நாட்டின் நிலப்பரப்பு சுமார் இரண்டு லட்சம் சதுர மைல். இது ஐரோப்பா கண்டத்திலுள்ள ரஷ்யாவைத் தவிர எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்த பரப்பளவுக்கு சமமாகும்.

உலகத்தில் ஆறில் ஒரு பாகத்தார் நம் நாட்டின் கிராமத்தில் வசிக்கிருர்கள். வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளின் மொத்த மக்களின் எண்ணிக்கையே நம் நாட்டின் கிராமவாசிகள் ஆவார்கள். அதாவது நம் நாட்டில் 100-க்கு 85 பேர்களுக்குமேல் கிராமவாசிகள். நமது ஊர் ஒரு சிறிய கிராமமாயிருந்தாலும் இந்தியாவில்தான் இருக்கிறது. நமக்கு இந்தியர்கள் என்று பெயர்.

நம் இந்தியா ஒரு தீபகற்பகம். மூன்று பக்கம் தண்ணீரால் சூழப்பட்டு ஒரு பாகம் பூமியோடு சேர்ந்திருக்கும் நிலபாகத்துக்கு தீபகற்பம் என்று பெயர். இதன் வட எல்லை இமயமலைத் தொடர். இது உலகத்திலுள்ள எல்லா மலைகளைக் காட்டிலும் உயர்ந்த மலை. இதன் உச்சிக்கு 'எவரெஸ்ட்' என்று பெயர். கங்கை, யமுனை, பிரமபுத்திரா முதலிய நதிகள் இதில் உற்பத்தியாகி வட இந்தியாவில் ஓடுகின்றன. இவைகள் பாயும் இடங்கள் செழிப்புள்ளதாகையால் மக்கள் நெருக்கமுள்ள பல பெரிய நகரங்களும், கிராமங்களும் இருக்கின்றன.

இந்தியாவின் தெற்கில் இந்து மகா சமுத்திரமும், கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், மேற்கே அரபிக் கடலுமாக மூன்று பாகமும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. கல்கத்தா, சென்னை, பம்பாய், கராச்சி என்ற பெரிய துறைமுகங்களும், பல சிறு துறைமுகங்களும் இருக்கின்றன. தமிழ் நாட்டில் தூத்துக்குடி, நாகப்பட்டிணம், புதுச்சேரி முதலியவை சிறிய முக்கிய துறைமுகப் பட்டிணங்கள். இவைகளில் சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற 175 வருட காலங்களாக இந்தியா முழுவதையும் ஆங்கிலேயர்கள் சுமார் 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள இங்கிலாந்து என்ற சிறிய நாட்டிலிருந்து ஆண்டு வந்தார்கள். அந்த நாடு நம் நாட்டில் இருபதில் ஒரு பங்குதானிருக்கும். நம்மையும், நம்முடைய செல்வங்களையும் தாராளமாக உபயோகித்து குடி அரசு என்ற மக்கள் ஆட்சியின் பெயரால் நம்மை ஆண்டு வந்தார்கள். 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி அன்று நம் இந்திய நாட்டின் ஆட்சியை நம்

முடைய ஒப்பற்ற தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு விலகிக்கொண்டார்கள். இன்று நம் நாடு சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டு கடந்துவிட்டன. நாமே நம்முடைய நாட்டை உண்மையான குடி அரசு என்ற மக்கள் ஆட்சி முறையில் சுதந்திரமாக ஆண்டு வருகிறோம்.

இந்தியாவின் பிரிவுகள்

நம் துரதிருஷ்ட வசத்தாலும், நம்மை ஆண்டு வந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியின் சூழ்ச்சியாலும், முஸ்லீம் லீக் தலைவராயிருந்த ஜனுப் மகமத் அலி ஜின்னுவின் விடாப்பிடி வாதத்தாலும், மகாத்மா காந்தியடிகளின் சகிப்பு, தியாகம் என்ற மனித மேன்மைத் தன்மையாலும், காங்கிரஸ் மகா சபையின் தாராள மனப்பான்மையாலும், நம் தமிழ் நாட்டுத் தலைவர் ராஜாஜியின் சிறந்த சமயத்துக்கு ஏற்ற அரசியல் அறிவினுலும் நம் தேசம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்படி பிரிக்கப்பட்ட பாகங்களுக்கு ஐக்கிய இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பெயர். ஐக்கிய இந்தியா பாகிஸ்தானைவிட பல மடங்கு நிலப்பரப்பிலும், மக்களின் எண்ணிக்கையிலும் பெரியது. இவைகள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சட்ட சபைகள் உண்டு. பாகிஸ்தானுக்கு ஜனுப் மகமத் அலி ஜின்னு, முதல் ராஜப்பிரதிநிதியாக இருந்தார். ஐக்கிய இந்தியாவின் முதல் ராஜப்பிரதிநிதி லார்ட் மௌண்பாட்டன், பிறகு நம் தமிழ் நாட்டின் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி. ஆங்கில ஆட்சியில் முதல் ராஜப்பிரதிநிதி வாரன் ஹேஸ்டிங்ஸ். அன்று இந்தியா முழுவதும் ஒரே நாடாக இருந்து வந்தது.

இன்று ஐக்கிய இந்தியாவின் ராஜப்பிரதிநிதியும், பாகிஸ்தானின் ராஜப்பிரதிநிதியும் இந்தியாவின் கடைசி இந்தியா ராஜப்பிரதிநிதிகளாக இருப்பார்கள். இனி குடி அரசு முறையில் ஆட்சி நடைபெறும். அப்பொழுது இவர்களுக்கு குடி அரசுத் தலைவர்கள் என்று பெயர் வழங்கப்படும். நம் நாட்டு முதல் குடி அரசு தலைவர் திரு. ராஜேந்திர பிரசாத். இங்கிலாந்திலிருந்து வந்த நம் நாட்டின் சக்ரவர்த்தி, தன் 'சக்ரவர்த்தி' என்ற பட்டத்தை இழந்துவிட்டார். நமக்கும் இங்கிலாந்துக்கும் குடி அரசாட்சி மூலமாக ஒப்பந்தங்கள் ஏற்படலாம்.

குடி அரசு ஆட்சியை எவ்விதம் ஏற்படுத்துவது என்ற திட்டத்தை வகுப்பதற்கு இரண்டு நாடுகளும் அந்தந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மாகாண சட்ட சபையிலிருந்து, அரசியல் நிர்ணய சபைகள் பாகிஸ்தானுக்கு ஒன்றும், நம் ஐக்கிய இந்திய நாட்டுக்கு ஒன்றும், நியமிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளின் வேலைகள் முடிவடைந்துவிட்டன. குடி அரசு ஆட்சியை நம் நாட்டில் ஏற்படுத்தியிருக்கிருர்கள். குடி அரசாட்சி முறை இந்நாடுகளில் நிறுவப்பட்டிருக்கிறது. 21 வயது வந்த ஆண் பெண் எல்லோருக்கும் ஓட்டு உரிமை உண்டு.

நம் ஐக்கிய இந்தியாவின் பிரதம மந்திரி பண்டிட் ஜவஹர்லால் நேரு. பாகிஸ்தானின் பிரதம மந்திரி ஜனுப் லியகாத் அலிகான். பாகிஸ்தானின் தலைநகர் கராச்சி. ஐக்கிய இந்தியாவின் தலைநகர் டில்லி நகரம்.

(தொடர்ச்சி 48-ம் பக்கம் பார்க்கவும்)

படியாத பட்டுசாமி

[இந்த சிறு நாடகம் திரு. கோவிந்தசாமி, காரியதரிசி ஜிஞ்ஜி தாலுக்கா, முதியோர் கல்விச் சங்கம், தென்ஆற்காடு ஜில்லா, அவர்களால் எழுதப்பட்டது. புதிதாக படித்தவர்கள் சுலபமாக இதை படிப்பது மல்லாது, நாடகமாக நடிக்கவும் உதவும்—ஆசிரியர்.]

சீன் 1

இடம் :—பட்டுசாமி வீடு, மனைவி கருப்பாயி, ஆசிரியர் அரங்கசாமி.

(பட்டுசாமி வயலில் வேலை செய்து விட்டு வீடு திரும்பி வருகிறான்)

பட்டுசாமி :—என்னடி குப்பாயி, என்னடி பண்றே ?

குப்பாயி :—வேலைதான் செய்ரேன். இந்த ஊட்லே காரியம் ஒண்ணும் இல்லாட்டிப் போனாலும் வேலைக்கித்தான் பஞ்சமில்லியே !

பட்டு :—அது இருக்கட்டும். அந்த பையன் எங்கடி போனான் ?

குப்பாயி :—பள்ளிக்கூடத்துக்குப் பூட்டான்.

பட்டு :—பள்ளிக்கூடத்துக்குப் பூட்டானா ! மாட்ட ஓட்டிக்கிட்டு போடான்னு சொல்லிட்டு போனனே. இவனுக்குப் பள்ளிக்கூடம் வேறயா வாழுது !

குப்பாயி :—நீதான் ஒரு எழுத்து கத்துக்காத பூட்டிய. அவனையும் முட்டாள் ஆக்கிடலான்னு பாக்கர.

பட்டு :—ஆமாண்டி அவன் படிச்சிதான் மணியம் பண்ணப்போறான் மாட்ட, கண்ண, ஓட்டிப் போவம். கொல்லய, கழனிய, பாப்பமுண்டு அவனுக்கு இல்லய. அது பொழைக்கப் போறது அப்படிதான் இருக்கும். நீயும் அவனோட சேர்ந்துக்குனு கூத்தடிக்கிற. அது கெடக்கட்டும். அந்த பொட்ட புள்ள எங்கடி பூட்டுது ?

குப்பாயி :—அதுவுந்தான் சாப்டுட்டு பள்ளிக்கூடம் பூட்டுது.

பட்டு :—சரிதான். குடுத்தனம் வௌங்கன மாதிரிதான். படியாளுக்குக் கஞ்சி குடுத்தனுப்படிண்ணு பள்ளிக்கூடம் பூட்டுதுண்ணு சொல்ரய ! பொட்டபுள்ள படிச்சிதான் கோட்டய புடிக்கப் போவுதாடி ?

குப்பாயி :—ஆமாம் கோட்ட புடிக்கறதுக்குத்தான் எல்லாம் படிக்கறதாட்டம் இருக்குது. நான்தான் முட்டாளா பூட்டன. அந்த பொண்ணுண்ணு நாலு எழுத்து கத்துக்கிட்டு மூண்டு பாத்தா அது உனக்கு புடிக்கல. பக்கத்து ஊட்டு பங்கசம் மவளே பாரு. அது படிக்கறதும், பாடறதும், என்ன ஆசையா இருக்குது ?

பட்டு :—படிக்கறதும், பாடறதுமாயிருந்தா கொல்ல வௌஞ்சி கஞ்சி குடிச்சிடலாம். பொட்ட கோழி கூவிதான் பொழுது வெடிஞ்சுடப் போவுது.

[ஆசிரியர் அரங்கசாமி முதியோர் சென்ஸஸ் எடுக்க வருகிறார்]

அ-சாமி :—நாய்க்கர் இருக்காருங்களா ?

பட்டு :—வாங்க வாத்தியார். எங்க இவ்வளவு தூரம் ?

அ-சாமி :—நம்ம ஊர்ல ஒரு முதியோர் கல்வி சங்கம் ஏற்படுத்தப் போருங்க. நீங்களும் அதிலே சேரனுங்க.

பட்டு :—அப்படின்னு ஒண்ணும் தெரியலிங்களே ?

அ-சாமி :—இளமையில் படிக்காத முதியோர்களுக்கு அவர்களுக்கு ஒய்வு நேரமாயிருக்கற காலத்தில எழுதப்படிக்கக் கற்று கொடுப்பதற்காக படித்தவர்கள் படிக்காதவர்களே எல்லாம் சேர்த்து நம்ம ஊரில் ஒரு சங்கம் வைக்கருங்க. நாளேக்கு நம்ம நாட்டாண்மைதார் நாருயணசாமி நாய்க்கர் தலைமையில் நடக்கப் போவுது. நீங்களும் வரணும். உங்களுக்கு படிக்கத் தெரியுங்களா ?

பட்டு :—ஹ-ம். அதெல்லாம் ஒண்ணும் தெரியாதுங்க. எனக்கு என்னுத்துக்குங்க அந்த படிப்பு, கிடிப்பெல்லாம். வயிசி முப்பதுக்குமேல் ஆச்சி பெரிய வெள்ளத்துக்குப் புறந்தாங்க. என் காலத்த தள்ளி பூட்டன்.

அ-சாமி :—உங்க பேரு சொல்லுங்க.

பட்டு :—என் பேரு பட்டுசாமிங்க. எனக்கு அந்த படிப்பு கிடிப்பெல்லாம் வேணுங்க. என் தொல்லே தான் எனக்கு சரியாயிருக்குதுங்களே.

அ-சாமி :—எந்த தொல்லே இருந்தாலும் படிக்காத தொல்லேதாங்க பெரிசு. உங்க ஊட்ல இருக்கிறவங்களுக்குப் படிக்கத் தெரியுங்களா ? அவங்க பேரு, வயசு எல்லாம் சொல்லுங்க.

குப்பாயி :—பொம்மனுட்டிங்க கூட படிக்கலாங்களா ? எம்பேரு கருப்பாயிங்க. வயிசி இருபத்தைந்துங்க.

பட்டு :—ஆமாண்டி. நீயும் நானும், படிக்காத தாண்டி குடி முழுவி போச்சி. எங்களுக்கு சங்கங்களும் வாணும், படிப்பும் வாணுங்க. பேரை எழுதிக்கினு நீங்க போங்க வாத்தியார்.

அ-சாமி :—அப்படி இல்லீங்க நாட்டாண்மைக்காரர் உங்கள் ரெண்டு பேரையும் அவசியம் வரச்சொன்ஞருங்க. அங்க வந்து என்னு சொல்ராங் கண்ணுதான் கேட்டுகினு வாங்க.

பட்டு :—அந்த நாட்டாமைதாருக்கு வேலே என்னுங்க. எப்பப் பார்த்தாலும் எதுனு செய்துகினு இருப்பாருங்க. நீங்க போய்வாங்க.

[அரங்கசாமி போகிருர்]

குப்பாயி :—என்னுங்க, நாமுந்தான் நாளேக்கு அந்த சங்கத்திலே சேர்ந்து ரெண்டு எழுத்து கத்துக்குவமே. ஒரு கணக்கு வழக்குத் தெரிஞ்சிருந்தா நமக்கு சுளுவா இருக்காதுங்களா ?

பட்டு :—ஆமாண்டி நீயும், நானும் படிக்காத தான் பொழுது போவல போய் பொழக்கிற வழியைப் பாருடி.

[போகிருர்கள்]

சீன் 2

இடம் :—கிராமப் பாடசாலே. நாட்டாண்மைதார் தலேமையில் முதியோர் கல்வி சங்கம் அமைத்தல்.

நாட்டாண்மைதார் :—ஊர்லே எல்லோரும் வந்துட்டாங்களா ?

செங்கல்வராயன் :—அநேகமா எல்லாரும் வந்துட்டாங்க. பட்டுசாமி நாய்க்கர் தான் வர்லீங்க.

நா. தார் :—அவன் என்னா சொல்றான் ?

செங்கல் :—படிப்பும் வாணாம் ஒண்ணும் வாணாண்ணு சொல்றாருங்க. வேலை இருக்குதான். சங்கத்துக்கு வரமுடியாதாம்.

நாட் :—படிக்காத சமாச்சாரம் இப்ப தெரியாது. நாளைக்குப் படும்போது தெரிந்து கொள்றான். சரி நம்ம ஊர்ல இன்றைக்கு முதியோர் கல்வி சங்கம் அமைக்கப் போறோம். படியாத ஆண், பெண் எல்லோரும் படிக்க ஆரம்பிக்கணும். இன்னும் மூன்று வருஷங்களுக்குள்ள நம்ம ஊரில் படிக்காதவர்களே இல்லாமல் இருக்கணும். இப்போது முதியோர் கல்வி பற்றி முத்துசாமி உங்களிடையே பேசுவார்.

முத்துசாமி :—தலைவர் அவர்களே ! பொது மக்களே ! இன்று இந்த கிராமத்தில் படித்தவர்களையும், படியாதவர்களையும், கொண்ட முதியோர் கல்வி சங்கம் அமைக்க முன் வந்ததைப்பற்றி நான் பெரிதும் சந்தோஷப் படுகிறேன், படிப்பின் அவசியத்தைப் பற்றி உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும் "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" எவ்வளவு செல்வமிருந்தாலும் படியாதவர் குருடர்களைப் போல பலரால் ஏமாற்றப்பட்டு மானமிழந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். ஏதோ பற்பல காரணங்களால் இளமையில் படிக்கத் தவறிய முதியோர்களை இச் சங்கத்தின் மூலம் படிக்கவைக்க முடியும். படியாதவர்களும், படிப்பவர்களும் உறுதியுடன் நடந்து கொண்டால் ஓரிரண்டு ஆண்டுகளில் இவ்வூரில் உள்ள எல்லோருமே படித்தவர்களாகி விடலாம். படியாத ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக மற்றவர்கள் பலவகையில் உதவி செய்யவேண்டும். இத்தகைய சங்கம் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கவேண்டியது அவசியமாகையால் இதைப் போற்றி வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[கரகோஷம்]

(தொடரும்)

V24710

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்து, பஞ்சாப், (கிழக்கு பஞ்சாப், மேற்கு பஞ்சாப்) வடமேற்கு எல்லை மாகாணம், கிழக்கு வங்காளம், பலுஜிஸ்தான் முதலியவை பாகிஸ்தான் பிரதேசங்கள். இவைகளில் பெருவாரியாக மகமதியர்களே வசிக்கின்றார்கள். இதன் மக்களின் எண்ணிக்கை 8-லிருந்து 10 கோடி என்று கணக்கிடலாம்.

சென்னை. பம்பாய், மேற்கு வங்காளம், ஒரிஸா, பீஹார், மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், அஸாம் முவலிய மாகாணங்களும் அநேகமாக எல்லா சமஸ்தானங்களும் நம் ஐக்கிய இந்தியாவில் சேர்ந்திருக்கிறது. நிஜாமும்; காஷ்மீரும் நம் ஐக்கிய இந்தியாவுடன் தான் சேர்ந்தது. ஐக்கிய இந்தியாவின் மக்களின் எண்ணிக்கை 30 கோடிக்கு மேலிருக்கலாம். ஐக்கிய இந்தியாவில் எல்லா வகுப்பினர்களும், மதத்தினர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஹிந்துக்களே பெருவாரியாக வசிக்கிறார்கள்.

ஐக்கிய இந்தியா பாகிஸ்தானைவிட பொருளாதாரம், மக்களின் எண்ணிக்கை, நிலப்பரப்பு மற்ற எல்லா வகையிலும் பல மடங்கு பெரியது.